**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம்.**

**முன்னிலை திருமதி. K. ஸ்ரீபதி, B.A., L.L.B.,**

நீதித்துறை நடுவர், வாணியம்பாடி.

2026 ஆம் ஆண்டு ஜூன் 10 ஆம் நாள் புதன்கிழமை.

பராமரிப்பு வழக்கு எண்.08/2024.

சி.என்.ஆர். எண். TNTU09-003096-2024

ஜெயந்தி க/பெ. கணேஷ்பாபு ....மனுதாரர்

//எதிராக//

கணேஷ்பாபு த/பெ. ஆறுமுகம் ....எதிர்மனுதாரர்

இவ்வழக்கு 29.04.2024 ஆம் தேதியன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு, இறுதியாக 10.06.2026 அன்று விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.உமர், M.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர்கள் திரு.சி.சண்முகா கணேசன், B.A., B.L., திரு.A.டில்லிபாபு., B.Sc., M.L., மற்றும் திரு.K.பூபதி., B.Sc., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இதுநாள் வரையில் பரிசீலனையில் இருந்து வந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

I. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யும் மனுவின் சாராம்சம்

மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 21.08.2006-ம் தேதியன்று வேலூர் மாவட்டம், வாணியம்பாடியில் உள்ள ஸ்ரீ பாரத் மஹால் திருமண மண்டபத்தில் இந்து முறைப்படி பெரியோர்கள் மற்றும் உறவினர்கள் முன்னிலையில் திருமணம் நடைபெற்றதாகவும், திருமணத்திற்கு மனுதாரரின் பெற்றோர்கள் 25 பவுன் நகைகளும் (ஆரம் -5 பவுன் நெக்லஸ் – 3 ½ பவுன், வளையல் 4-6 பவுன், லாங் செயின் 1 – 3 பவுன், தோடு மாட்டல் 1 ½ பவுன், மோதிரம் & ரிங் – 1 பவுன் மற்றும் எதிர்மனுதாரருக்கு 5 பவுன் செயின், 1/½ பவுன் மீன் டாலருடன் அவருக்கு அணிவித்ததாகவும், மேற்படி

திருமணத்திற்கான சீதனப் பொருளாக ரூ. 1 இலட்சம் மதிப்பிலான பொருட்களை எதிர்மனுதாரருக்கு மனுதாரரின் பெற்றோர்கள் வழங்கியதாகவும், நகைகள் மற்றும் பொருட்கள் எதிர்மனுதாரர் வசமே அனைத்தும் உள்ளதாகவும், திருமணத்திற்கு பின்னர் எதிர்மனுதாரரும் மனுதாரரும் அன்று இரவே திருச்சியில் உள்ள எதிர்மனுதாரரின் வீட்டில் எதிர்மனுதாரரின் தாயார் திருமதி. வீரம்மாளுடன் ஒன்றாக வசிக்கத் தொடங்கியதாகவும், திருமணமான பிறகு எதிர்மனுதாரர் சரிவர மனுதாரருடன் பேசாமல், அவருடன் உறவை சரிவர விரும்பாமல் தவிர்த்து இருந்து வந்தும், இது குறித்து மனுதாரர் கேட்டபொழுது, "தான் ஒரு அரசு மாநகராட்சி ஊழியராக இருந்தும், சொந்தமாக தில்லைநகரில் வீடு சொத்து வைத்துள்ளதாகவும், தனக்கு வெளியில் 50 பவுன் நகையும், 5 இலட்சம் பணமும் கொடுத்து பெண் கொடுப்பதாக கூறியதை விட்டுவிட்டு, ஏமாந்து மனுதாரரை திருமணம் செய்து கொண்டதாக கூறியதாகவும், எதிர்மனுதாரரின் தவிர்க்கும் போக்கையும், செயலையும் கண்டு அச்சம் மற்றும் நாணத்தால் வெளியில் சொல்லாமல் அமைதியாக வாழ்ந்து வந்ததாகவும், இதன் பிறகு மூன்று மாத காலமாக எதிர்மனுதாரர் மனுதாரருடன் சரிவர பேசாமல் எதிர் வீட்டிற்கு சென்று வந்ததை பொறுத்து மனுதாரர் கேள்வி கேட்டவுடன் எதிர்மனுதாரர் இதைபற்றி பேசக்கூடாது என்றும், அப்படி மீறி பேசினால் எதிர்மனுதாரர் வீட்டில் வாழ முடியாது என்றும், வீட்டைவிட்டு விரட்டி விடுவதாக மிரட்டியதாகவும், மேலும், மூன்று மாத காலத்திற்கு பிறகு எதிர்மனுதாரர் மனுதாரருடன் சேர்ந்து ஒரே படுக்கையறையில் படுப்பதை தவிர்த்து மேற்படி மனுதாரரின் படுக்கையறையின் முன்புறமுள்ள படுக்கையறையில் படுப்பதையே எதிர்மனுதாரர் வாடிக்கையாக கொண்டதாகவும், மனுதாரரும் இதை வெளியில் சொன்னால் அவரது பெற்றோர்கள் மற்றும் குடும்பத்தினர் தவறாக நினைப்பார்கள் என்றும், மனுதாரரின் வாழ்க்கை பறிபோகிவிடும் என்று நினைத்து எதிர்மனுதாரரால் தாலி கட்டப்பட்ட நாள் முதல் சுமார் 10 வருட காலமாக ஒரே கூரையில் ஒரே வீட்டில் தனி படுக்கையறையில் மனுதாரரை படுக்க செய்துள்ளதாகவும், திருமணமான முதல் எதிர்மனுதாரர் மனுதாரரை வெளி இடங்களுக்கோ, ஹனிமூனுக்கோ அல்லது கோவில், குளம், உறவினர்கள் வீடு என எங்கும் அழைத்து செல்லாமல் தவிர்த்து வந்ததாகவும், மனுதாரருக்கு திருச்சியில் வேறு

யாரும் பழக்கமோ, அறிமுகமோ இல்லாததால் மனுதாரர் அமைதியாக வீட்டிலேயே இருந்து தனது கணவரான எதிர்மனுதாரருக்கும், அவருடைய தாயாருக்கும் ஒரு வேலைக்காரியை போல் காலையில் 5 மணி முதல் இரவு 12 மணிவரை சமைப்பது, துவைப்பது, பாத்திரம் கழுவுவது என அனைத்து வேலைகளையும் செய்து வந்ததாகவும், மனுதாரர் செல்போன் வைத்துக்கொள்ள கூடாது என்று தடை செய்து விட்டதாலும், ஏற்கனவே வீட்டிலிருந்த தொலைபேசியையும் திருமணமான சில மாதத்திலேயே துண்டித்தும் விட்டுவிட்டார், ஆனால் எதிர்மனுதாரர் மதியம் வேலைக்கு செல்வதாக கூறி எதிர் வீட்டில் தில்லைநகர், 6வது குறுக்கு, கதவு எண். D-50 வீட்டில் தரை தளத்தில் வசிக்கும் திருமதி. போஜினி வீட்டிற்கு செல்வதை வாடிக்கையாக வைத்தும், போஜினியின் கணவர் ரங்கநாதன் இலங்கையில் தொழில் செய்து வருவதாலும், அவரது மகன் மற்றும் மகள் மாடியில் இருந்து வந்ததால் எதிர்மனுதாரர் வெகுவாக மேற்படி போஜினியுடன் தினம்தினம் போய் வந்துள்ளதாகவும், மனுதாரருடன் எதிர்மனுதாரர் கணவன் மனைவி என உறவு வைத்துக்கொள்ளாமல் தவிர்த்து வந்ததாகவும், அதேபோல் மனுதாரரின் சகோதரரின் இறப்பிற்கு மருத்துவமனைக்கு வந்து விட்டுவிட்டு உடனே சென்றுவிட்டதாகவும், அதேபோல் மனுதாரரின் சகோதரியின் திருமணத்திற்கு முகூர்த்த சமயத்தில் வந்து விட்டு சென்றுவிட்டதாகவும், மனுதாரர் பெற்றோருக்கு மூத்த மகள் என்பதாலும், மேலும் மனுதாரருக்கு இரண்டு சகோதரிகள் உள்ளதாலும், எதிர்மனுதாரரும், மாமியாரும் திருமணமானது முதல் மனுதாரரின் பெற்றோர் வீட்டிலிருந்து பாகம் வாங்கி வர சொல்லி இல்லையென்றால் மேலும் 25 பவுன் நகையும், 5 இலட்சம் பணம் வாங்கி வா என்றும் கேட்டு மிரட்டி வந்ததாகவும், அதுவரை மனுதாரரை தொட மாட்டேன் என்றும், எந்த உடலுறவும் வைத்துக்கொள்ள மாட்டேன் என்றும், மேலும் வாணியம்பாடியில் மனுதாரரின் தாயார் குடும்ப அட்டையில் இருந்த மனுதாரரது பெயரை நீக்க சொல்லி, திருச்சியில் எதிர்மனுதாரரின் வீட்டு குடும்ப அட்டையில் அவரது பெயரை சேர்த்துக் கொள்வதாக மனுதாரரிடம் கூறியதாகவும், ஆனால் இதுநாள்வரை எதிர்மனுதாரர் அவரது குடும்ப அட்டையில் மனுதாரரின் பெயரை சேர்க்காமல் மனுதாரரை புறக்கணித்து வருவதாகவும், மனுதாரர் வாழ்க்கை சீரழிக்கப்பட்டு வருகிறது

என்பதையும், பெண்மை பிறவியே அர்த்தமற்று அழிக்கப்படுகிறது என்பதை உணர்ந்து கடந்த ஆகஸ்ட், 2015 சமயத்தில் புகார் அளித்ததாகவும், மேற்படி புகாரை பற்றி எதிர்மனுதாரரின் ஆள்பலம், பணபலம் மற்றும் 05.09.2015 அன்று அரசியல் பலத்தால் தெரிந்துகொண்டு கடந்த எதிர்மனுதாரர் S. பிரகாஷ் என்ற வழக்கறிஞரை வைத்து புகாரை விசாரிக்க கூடாதென்று மேற்படி காவல் நிலையத்திற்கு அறிவிப்பு அனுப்பியதாகவும், அதன் நகலை மனுதாரரின் தாயாருக்கும் அனுப்பியுள்ளார்கள். எனவே போலீசார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், எதிர்மனுதாரரையும், அவருடைய குடும்பத்தினரையும் திருத்துவதற்காக கடந்த 22.05.2016 அன்று திருச்சி, ஸ்ரீரங்கம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், மேற்படி புகாரை பெற்றுக்கொண்ட அனைத்து மகளிர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் சுமதி விசாரித்துவிட்டு அதிர்ச்சியடைந்து கிரிமினல் வழக்கு பதிவு செய்து எதிர்மனுதாரரையும், அவருடைய தாயார் மற்றும் மேற்படி போஜினியை சிறைக்கு அனுப்பினால்தான் திருந்துவார்கள் என்று விசாரணையை தொடங்கியதாகவும், ஆனால் அதன்பின் சிறிது நாட்களிலேயே எதிர்மனுதாரர் அவருடைய பணபலம், பதவி பலம் மூலம் மேற்படி அனைத்து மகளிர் காவல் நிலையத்தினரை வசப்படுத்தி வழக்கு பதிவு செய்ய விடாமல் தடுத்ததாகவும், எனவே மனுதாரர் மேற்படி ஸ்ரீரங்கம் அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு வந்து மேற்படி உதவி ஆய்வாளர் சுமதியை தொடர்பு கொண்டு கேட்டபொழுது, தான் சொல்லும்படி ஒரு புகார் எழுதிக்கொடு என்று மேற்படி உதவி ஆய்வாளர் சுமதி கூறியதன் பேரில் மீண்டும் 22.05.2016 தேதியிட்டு புகாரை 19.06.2016 அன்று எழுதக் கூறி எதிர்மனுதாரருக்கு சாதகமாக சம்பவங்கள் உருவாக்கி புகாரை பொத்தாம் பொதுவாக எழுதி வாங்கி அந்த புகாரை வழக்கு பதிய செய்தாகவும், இச்சமயத்தில் எதிர்மனுதாரரும் அவர் குடும்பத்தாரும் மனுதாரர் மீது கோபமாகவும் மனுதாரருக்கு உணவு கூட கொடுக்காமல் புறக்கணித்ததாகவும், மனுதாரருக்கு வேறு வழி தெரியாமல் மனுதாரர் கட்டிய உடையுடன், ஒரு பையுடனும் மற்றும் மேற்படி போலீசார் ஒரே வீட்டில் இருந்தால் வழக்கு பதிவு செய்து எதிர்மனுதாரரை திருத்த முடியாது என்றும் கூறியதால் மனுதாரர் கடந்த 09.06.2016 அன்று மனுதாரரின் பெற்றோர் வீடான வாணியம்பாடிக்கு சென்று விட்டதாகவும், ஆனால் எதிர்மனுதாரரோ

இதுநாள் வரை மனுதாரரை என்ன ஆனார் என்று சிறிதும் பாராமல் மனுதாரருடைய நகைகள் மற்றும் உடைகள், சீர்வரிசை பொருட்கள் அனைத்தையும் அவரிடமே வைத்துக்கொண்டு மனுதாரருடன் சேர்ந்து வாழாமல் தவிர்த்து வருவதாகவும், எதிர்மனுதாரர் திருச்சி மாநகராட்சியில் பொறியாளராக பணி செய்து மாதம் சுமார் ரூ. 60,000/- வரை சம்பளம் பெற்றும், இதைத் தவிர வெளி நபர்களுக்கு சுமார் 1 கோடி வரை வட்டிக்கு பணம் கொடுத்து மாதம் சுமார் 2 லட்சம் வரை சம்பாதித்து தனக்கு சொந்தமான தில்லைநகர் வீட்டில் சுகபோகமாக வாழ்ந்து வருவதாகவும், அவரது மனைவியாகிய மனுதாரர் சுமார் 10 வருடங்களுக்கு மேலாக உலகமே எதிர்மனுதாரர்தான் என்று வாழ்ந்து வந்து, மனுதாரருக்கு வேறு வருமானமும் இல்லாமலும், வேறு தொழில் எதுவும் தெரியாமலும், இவ்வாறாக வாழ்க்கை பொருளுதவி ஏதும் இன்றி தன் பெற்றோருடன் வாழ்ந்து கஷ்ட ஜீவனம் செய்து வருவதாகவும், எனவே மனுதாரருக்கு மாதம் உணவு, உடை, இருப்பிடம் என ஜீவனத்திற்கு சுமார் 30 ஆயிரம் வரை தேவைப்படுவதாகவும், மனுதாரருக்கு மேற்படி மாத ஜீவனம் தர எதிர்மனுதாரர் கடமைப்பட்டவர் என்றும், மேற்படி மனுதாரர் இதற்குமுன்பு வேறு எந்த நீதிமன்றத்திலும் இது குறித்து மனு எதுவும் தாக்கல் செய்ததில்லை என்றும், மனுதாரருக்கு மாத ஜீவனாம்சமாக ரூ.30,000/- எதிர்மனுதாரர் வழங்க உத்தரவிடுமாறு இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

**II. எதிர்மனுதாரர் சார்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சாராம்சம்**

குற்றவியல் நடைமுறைச் சட்டம் (Cr.P.C.) பிரிவு 125-ன் கீழ் மனுதாரர் தாக்கல் செய்த மனு சட்டரீதியாக நிலைநிறுத்த முடியாதது என்றும், அதில் கோரப்பட்டுள்ள எந்த நிவாரணத்திற்கும் மனுதாரர் தகுதியற்றவர் என்றும், வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள உண்மைகளைத் தவிர, மனுவில் கூறப்பட்டுள்ள மற்ற அனைத்து குற்றச்சாட்டுகளும் பொய்யானவை, புனையப்பட்டவை, ஆதாரமற்றவை மற்றும் தொந்தரவு செய்யும் நோக்கத்துடன் முன்வைக்கப்பட்டவை என்றும், அவற்றை நிரூபிக்கும் பொறுப்பு மனுதாரருக்கே இருப்பதாகவும் பொய்யான மற்றும் கற்பனையான

குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளதாகவும், மனுதாரரும் எதிர்மனுதாரரும் 21.08.2006 அன்று வேலூர் மாவட்டம், வாணியம்பாடியில் உள்ள ஸ்ரீ பாரத் மஹாலில், பெரியோர்கள் முன்னிலையில் திருமணம் செய்து கொண்டதாகவும், அந்தத் திருமணத்தில் குழந்தைகள் எவரும் பிறக்கவில்லை என்றும் வரதட்சணை, நகை அல்லது பிற பொருட்கள் எதையும் எதிர்பார்க்காமல் தாம் மனுதாரரை திருமணம் செய்து கொள்ள சம்மதித்ததாகவும், திருமணத்தின் போது மனுதாரரின் பெற்றோர் எவ்வளவு நகை அல்லது பொருட்களை வழங்கினர் என்பது தமக்குத் தெரியாது என்றும், தமக்கு மூன்று சகோதரர்களும் ஒன்பது சகோதரிகளும் இருப்பதாகவும், தமது தந்தை 1998 ஆம் ஆண்டு காலமானதாகவும், தந்தையின் மறைவுக்குப் பிறகு குடும்பத்தின் அனைத்து பொறுப்புகளையும் ஏற்றுக்கொண்டதாகவும், மேலும், 83 வயதுடைய தமது தாயார் வயது முதிர்வால் ஏற்படும் பல உடல்நலக் குறைபாடுகளால் பாதிக்கப்பட்டு தமது பராமரிப்பில் இருப்பதாகவும், மனுதாரர் அவரை அன்புடன் கவனிக்கும் மருமகளாக இருப்பார் என்று நம்பியதாகவும் தமது எதிர்பார்ப்புகளுக்கு மாறாக, மனுதாரர் அலட்சியமான மற்றும் கொடூரமான அணுகுமுறையைக் கொண்டிருந்ததாகவும், மனுதாரர் திருமண வாழ்க்கையில் எந்தவித ஆர்வமும் காட்டவில்லை என்றும், திருமணம் உடலுறவு மூலம் நிறைவேறவில்லை என்றும், மேலும், மனுதாரர் வாணியம்பாடியில் வேறொருவரை காதலித்ததாகவும், பெற்றோரின் கட்டாயத்தால் தான் இந்த திருமணத்தை செய்ததாகவும் ஒப்புக்கொண்டதாகவும், தங்களுக்கிடையேயான வயது வித்தியாசம் காரணமாக தம்மை கணவராக ஏற்க முடியாது என்று மனுதாரர் பலமுறை கூறியதாகவும், மனுதாரர் வீட்டு வேலைகளில் ஆர்வம் காட்டவில்லை என்றும், தமது தாயாரே தினமும் உணவு சமைத்து வந்ததாகவும், அடிக்கடி தனது பெற்றோர் வீட்டிற்கு சென்று நீண்ட நாட்கள் தங்கியிருந்ததாகவும், ஒரே வீட்டில் வசித்தபோதிலும், கணவன்–மனைவி உறவு இல்லை என்றும், கடந்த பதின்மூன்று ஆண்டுகளாக தனிமையான வாழ்க்கை வாழ்ந்து வருவதாகவும், மனுதாரர் தனது திருமணக் கடமைகளை நிறைவேற்றாமல், தனது பெற்றோருடன் வாணியம்பாடியில் நிரந்தரமாக வாழ விரும்புவதாகவும், தாமும் தமது தாயாரும் வாடகை வீட்டில் வசிக்க வேண்டும் என மனுதாரர் கூறியதாகவும், மனுதாரரின் செயல்களால் தாம் உடல் மற்றும் மன ரீதியாக

பாதிக்கப்பட்டதாகவும், திருமண வாழ்வின் மகிழ்ச்சியிலிருந்து விலக்கப்பட்டதாகவும், மனுதாரர் தம்மை நியாயமான காரணமின்றி கைவிட்டுச் சென்றதாகவும், கொடுமைப்படுத்தியதாகவும், 2015 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், மனுதாரர் நகைகளை எடுத்துக்கொண்டு தமக்குத் தெரியாமல் திருமண இல்லத்தை விட்டு வெளியேறியதாகவும், பின்னர் பல சமரச முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும், அவை அனைத்தும் தோல்வியடைந்ததாகவும், தற்போதைய சூழ்நிலைகளில், மனுதாரருடனான இணைவு அல்லது சமரசத்திற்கு எந்த வாய்ப்பும் இல்லை என்றும் அதன்படி, திருச்சி குடும்ப நீதிமன்றத்தில் H.M.O.P. எண் 170/2016 என்ற விவாகரத்து மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், அது தற்போது நிலுவையில் இருப்பதாகவும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் பணியாற்றி வருவதாகவும், மாதம் ரூ.35,000/- சம்பளம் பெறுவதாகவும், திருச்சியில் உள்ள பூர்வீக வீட்டில் வசித்து வருவதாகவும், மனுதாரர் குடும்ப வன்முறைச் சட்டத்தின் கீழ் வழக்கு தொடர்ந்ததோடு, அதில் பராமரிப்பு தொகையும் கோரியுள்ளதாகவும், அந்த வழக்கு திருச்சி கூடுதல் மகிளா நீதிமன்றத்தில் D.V.C. எண் 30/2017 ஆக நிலுவையில் இருப்பதாகவும், ஒரே நிவாரணத்திற்காக இரண்டு வெவ்வேறு நீதிமன்றங்களில் வழக்குகள் தொடரப்பட்டுள்ளதாகவும், மனுதாரர் தம்மையும், தமது தாயாரையும் மற்றும் குடும்ப உறுப்பினர்களையும் எதிர்த்து ஸ்ரீரங்கம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பொய்யான குற்றச்சாட்டுகளுடன் புகார் அளித்ததாகவும், அதன் அடிப்படையில் தொடுக்கப்பட்ட குற்றவியல் வழக்கு C.C. எண் 16/2017 ஆக நிலுவையில் இருப்பதாகவும், மனுதாரர் தற்போது தம்முடன் வசிக்கவில்லை என்றும், பல சமரச முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் திருமண இல்லத்திற்குத் திரும்பவில்லை என்றும் பராமரிப்பு தொகை கோருவதற்கு தேவையான குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் மனுவில் இல்லை என்று மனுதாரர் தனது பெற்றோருடன் தனியாக வசித்து வருவதாகவும், திருமணத்திற்குப் பிறகும் மனுதாரர் வேறொரு நபருடன் தொடர்பைத் தொடர்ந்து வைத்திருந்ததாகவும், பெரியோர்கள், நலன் விரும்பிகள் மற்றும் தாம் பலமுறை அறிவுறுத்திய போதிலும் அதனை நிறுத்தவில்லை என்றும், தற்போதைய மனு தம்மைத் தொந்தரவு செய்வதற்கும், சட்டவிரோதமாக பணம் கோருவதற்குமான நோக்கத்துடனும் தாக்கல் செய்யப்பட்டதாகவும், எனவே, மேற்படி

மனு தள்ளுபடி செய்ய வேண்டுமாய் பணிவுடன் வேண்டுகிறேன் என்று எதிர்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. மனுதாரர் தரப்பில் மனுதாரர் ம.சா.1 ஆக சாட்சியம் அளித்து, மனுதாரர்தரப்பில் சான்றாவணங்கள் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.7 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் எ.ம.த.சா.1 ஆக சாட்சியம் அளித்து, எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.3 சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

## III. தீர்வு

தற்போது தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர் சரியான காரணங்களுக்காகத்தான் எதிர்மனுதாரரை விட்டு பிரிந்து வாழ்கிறாரா என்பதாகும்,

1. மேலும், இவ்வழக்கானது மாண்புமிகு உயர்நீதிமன்ற மதுரை கிளை Crl.O.P(MD).No.21558/2022 மற்றும் Crl.M.P(MD).No.15186/2022 உத்தரவின் அடிப்படையில் இவ்வழக்கானது மாண்புமிகு திருச்சி மாவட்ட குடும்பநல நீதிமன்றத்திலிருந்து வழக்கு கோப்பு மாற்றம் செய்யப்பட்டு வாணியம்பாடி குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் MC.No.8/2024 ஆக வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

2. ம.சா.1 ஜெயந்தி அவரது நீதிமன்ற சாட்சியத்தில், இவ்வழக்கை ஜீவனாம்சம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றும், ம.சா.1க்கு திருமணம் நடைபெற்றது என்றால் 21.08.2006 திருமணமான நாளில் இருந்து எங்கு வசித்து வந்தோம் என்றால் திருச்சி, தில்லை நகர் எதிர்மனுதாரருடன் வசித்து வந்தேன் என்றும், எதிர்மனுதாரர் வீட்டில் வசித்து வந்தபோது எனக்கும் எதிர்மனுதாரருக்கும் தாம்பத்ய உறவு இல்லை என்றால் இருந்தது (நான் கர்ப்பம்தரிக்காத முறையில் இருந்தது) என்றும், இவ்வழக்கில் தாம்பத்ய உறவே இல்லை என்று கூறியிருந்தால் அது தவறு என்றால் சரிதான் என்றும், தில்லை நகரில் இருந்தபோது அடிக்கடி எனக்கும் எதிர்மனுதாரருக்கும் அடிக்கடி தகராறு ஏற்படும் என்றால் இல்லை என்றும், திருமணத்திற்கு முன்பே ஒருவரை

காதலித்ததாக கூறியதால் தான் எதிர்மனுதாரர் தாம்பத்ய உறவு வைத்துக்கொள்ளவில்லை என்றால் பொய், எதிர்மனுதாரருக்கும் எதிர் வீட்டு பெண்ணுக்கும் தொடர்பு இருந்ததால் தான் எதிர்மனுதாரர் குழந்தை வேண்டாம் என்று கூறினார் என்றும், ம.சா.1ம் எதிர்மனுதாரும் திருச்சியில் இருந்தபோது அடிக்கடி ஏற்பட்ட தகராறு காரணமாக காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளேனா என்றால் சரிதான் என்றும், ம.சா.1 கொடுத்த புகாரின் பேரில் போஜினியம்மா பேரிலும் வழக்கு பதிவு செய்தார்கள் என்றால் சரிதான் என்றும், அது நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது என்றால் சரிதான் என்றும், ம.சா.1 மேற்படி கொடுத்த புகாரில் உள்ள சங்கதிகளை நீதிமன்ற விசாரணையில் நிரூபிக்கப்படாததால் அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது எனக்கு தெரியுமா என்றால் தெரியும் என்றும், போலிசார் ம.சா.1ன் அம்மா வீட்டிற்கு போங்க என்று கூறி அனுப்பி வைத்தனர் என்றும், அதிலிருந்து அம்மா வீட்டில் தான் இருக்கிறேன் என்றும், வாணியம்பாடியில் இருந்ததால் திருச்சி சென்று இந்த வழக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றும், வாணியம்பாடியிலிருந்து திருச்சி சென்று தாக்கல் செய்த வழக்கு எதிர்மனுதாரரை பழிவாங்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக தான் போட்டேன் என்றால் சரியல்ல என்றும், எதிர்மனுதாரர் HMOP வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான் என்றும், வேலைக்கு சென்றால் வருமானம் ஈட்டி ம.சா.1ன் வாழ்க்கையை நான் பராமரித்துக்கொள்ள வாய்ப்பு உள்ளது என்றால் சரியல்ல என்றும், எதிர்மனுதாரர் வீட்டிலிருந்து யாரிடமும் சொல்லாமல் நானே திருச்சியிலிருந்து வாணியம்பாடி வந்துவிட்டேன் என்றாலும் அதன் அடிப்படையில் எதிர்மனுதாரரிடம் நான் ஜீவனாம்சம் பெற தகுதி இல்லை என்றால் சரியல்ல என்றும், இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டியது என்றால் சரியல்ல என்றும் சாட்சியமளித்துள்ளார்.

3. எ.ம.சா.1 கணேஷ்பாபு அவரது நீதிமன்ற சாட்சியத்தில், மனுதாரர் சட்டப்படியான மனைவி என்றால் சரிதான் என்றும், எந்த தேதியில் இருந்து பிரிந்துள்ளோம் என்றால் ஏப்ரல் மாதம் 2016 வருடத்தில் இருந்து பிரிந்துள்ளோம் என்றும், திருமணம் ஆகி எத்தனை நாட்கள் எங்கள் வீட்டில் இருந்தோம் என்றால் 2006 முதல் 2016 ம் வருடம்

வரை, நான் அவர்களை ஒரு நாள் கூட மனுதாரரை வெளியில் அழைத்து செல்லவில்லை என்றால் சரிதான் என்றும், மனுதாரர் வாணியம்பாடியில் ஒரு நபரை காதலித்து வந்ததாகவும், அவரது பெற்றோர் அவரை திருமணம் செய்து வைக்கவில்லை என்பதால் கட்டாயத்தின் பேரில் என்னை திருமணம் செய்து வைத்ததாக கூறி என்னுடன் வாழ மறுத்துவிட்டார் என்றும், ஒரு நாள் கூட நான் அவர்களை மருத்துவமனைக்கு அழைத்து சென்றதில்லை என்றால் சரியல்ல என்றும், திருச்சி கார்ப்பரேசனில் 1994 இல் இருந்து வேலை செய்து வருவதாகவும், Gross Salary எவ்வளவு என்றால் 76,000. NET Salary 56,000 என்றும், அந்த வீட்டின் மதிப்பு 10 கோடி போகுமா என்றால் அது எனக்கு தெரியாது என்றும், 2016 முதல் இன்று வரை ஜீவனாம்சமாக தொகை ஏதேனும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை என்றும், கணவர் என்பவர் ஒரு மனைவிக்கு ஜீவனாம்ச தொகை கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரிதான் என்றும், எ.ம.சா.1ன் மனைவி சேர்ந்து வாழவில்லை என்பதால் கொடுக்கவில்லை என்றும், 2016 முதல் இன்றைய தேதிவரையில் என்னுடன் வாழ வேண்டும் என்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளேனா என்றால் இல்லை என்றும், என் அம்மா வீராம்மாள் ஹைபர் தைராய்டு நோயால் பாதிக்கப்பட்டவர் என்றால் சரிதான் என்றும், மேலும் நீரிழிவு நோயாலும், உயர் இரத்த அழுத்த நோயாலும் கடந்த 20 ஆண்டுகளாக மேற்படி நோயால் பாதிக்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான் என்றும், மேற்படி அம்மாவை பார்த்துக்கொள்ள ஒரு பணியாளராக மனுதாரரை திருமணம் செய்துக்கொண்டேன் என்றால் இல்லை என்றும், அம்மாவை பார்த்துக்கொள்வார் என்றும் அவரை திருமணம் செய்துக்கொண்டேன் என்றால் சரிதான் என்றும், 2006 முதல் 2016 வரை என் மனைவி என்னுடன் வாழவே இல்லை என்று எதாவது வழக்கறிஞர் அறிவிப்பாவது அனுப்பியுள்ளேனா என்றால் இல்லை என்றும், மனுதாரரின் பெற்றோருக்கு ஒரு கடிதமாவது எழுதினேனா என்றால் இல்லை என்றும், போஜீனி என்பவரின் கணவர் சிலோனில் உள்ளாரா அல்லது இங்கிலாந்தில் உள்ளாரா என்றால் அது தெரியாது என்றும், போஜீனியின் வீடு எனக்கு எதிர்வீடு என்றால் சரிதான் என்றும், போஜீனியும் கடந்த 30 ஆண்டுகளாக எதிர் வீட்டில் தான் இருக்கிறார் என்றால் சரிதான் என்றும், போஜீனியுடன் தான் இனி எந்த உறவும்

வைத்துக்கொள்ளமாட்டேன் என்று காவல் நிலையத்தில் எழுதிக்கொடுத்தேனா என்றால் நினைவில்லை என்றும், திருமணத்திற்கு முன்பே போஜீனியுடன் தான் தொடர்பில் இருந்ததால் தான் மனுதாரை புறக்கணித்தேன் என்றால் சரியல்ல என்றும், இந்த நீதிமன்றத்தில் இன்றைய தேதி வரை தான் சொத்து மற்றும் வருமானம் சம்மந்தமான விவரங்களையோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

4. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனு, எதிர்மனு இருதரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. மேற்படி சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களிலிருந்து மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 21.08.2006ம் தேதி திருமணம் நடைபெற்றது என்பது இரு தரப்பில் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ள சங்கதிகள் என்பதும், திருமணமான பிறகு எதிர்மனுதாரர் சரிவர மனுதாரருடன் உறவை சரிவர விரும்பாமல் தவிர்த்து இருந்து வந்ததும், போஜினி வீட்டிற்கு செல்வதை வாடிக்கையாக வைத்ததும், மனுதாரருடன் எதிர்மனுதாரர் கணவன் மனைவி என உறவு வைத்துக்கொள்ளாமல் தவிர்த்து வந்ததாகவும், மனுதாரர் ஸ்ரீரங்கம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார்கொடுத்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதும், மனுதாரர் அவருடைய பெற்றோர் வீட்டில் தான் வசித்து வருகிறார் என்பதும் தெரியவருகிறது. எனவே, மனுதாரர் சரியான காரணத்தின் பெயரில் தான் எதிர்மனுதாரரை விட்டு அவரது பெற்றோர் வீட்டில் வசித்து வருகிறார் என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

5. எதிர்மனுதாரர் மனுதாரரின் பராமரிப்பிற்கு எந்தவிதமான பண உதவியோ பொருள் உதவியோ செய்யவில்லை என்பதும், மனுதாரர் வாணியம்பாடியில் ஒரு நபரை காதலித்து வந்ததாகவும், அவரது பெற்றோர் அவரை திருமணம் செய்து வைக்கவில்லை என்பதால் கட்டாயத்தின் பேரில் என்னை திருமணம் செய்து வைத்ததாக கூறி என்னுடன் வாழ மறுத்துவிட்டார் என்று எதிரிமனுதாரர் கூறியுள்ள நிலையில், அது குறித்த ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. தற்போதும் மனுதாரரும்

எதிர்மனுதாரரும் கணவன் மனைவி என்ற உறவு முறையிலேயே இருந்து வருவதும், அவர் மனுதாரரை பராமரிக்க எந்த விதமான பராமரிப்பு தொகையும் கொடுத்து வரவில்லை என்பது மேற்கண்ட பரிசீலனைகளில் இருந்து தெரியவருகிறது. மேலும், எதிர்மனுதாரர் திருச்சி கார்பரேசனில் 1994 இல் இருந்து வேலை செய்து வருவதாகவும், Gross Salary ரூ.76,000/- NET Salary ரூ.56,000/- என்றும், சொந்தமாக வீடு உள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது. மேலும், பராமரிப்பு வழக்கை பொறுத்தவரை எதிர்மனுதாரரின் வருமானம் குறித்து எதிர்மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் என்ற நிலையில் எதிர்மனுதாரர் அவரது வருமானம் குறித்து நீதிமன்றத்தில் சாட்சியமோ சான்றாவணமோ தாக்கல் செய்யவில்லை என்பது தெரியவருகிறது. மனுதாரரின் அன்றாட வாழ்க்கைக்கு தேவையான வசதிகளை மனுதாரரின் தந்தை தான் செய்து பராமரித்து வருகிறார்கள் என்பதும் தெரியவருகிறது. எனவே, மனுதாரர் ஜீவனாம்சம் பெற தகுதியுடையவர் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

6. எனவே, எதிர்மனுதாரர், மனுதாரரை முறையாக இன்றுவரை பராமரிக்கவில்லை என்பது மனுதாரர் தரப்பு சாட்சியத்திலிருந்து தெரியவருகிறது. இதனை குவிமுச 125(1) (அ) பிரிவானது தன்னைத் தானே பராமரித்து கொள்ள இயலாத அவரது மனைவியை கணவர் ஜீவனாம்சம் அளித்து பராமரிக்க கடமைப்பட்டவராவார் என்று கூறுகிறது. இம்மனுவை பரிசீலனை செய்கையில் எதிர்மனுதாரர் மனுதாரரின் கணவர் என்ற முறையில் மனுதாரரை பராமரிக்க கடமைப்பட்டவர் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

7. எனவே, கணவன் என்ற முறையில் எதிர்மனுதாரர் அவரது மனைவியான மனுதாரருக்கு தற்போதைய விலைவாசிக்கு ஏற்ப அவரது உணவு, உடை, உறைவிடம், மருத்துவ செலவு ஆகியவற்றை கருத்தில் கொண்டு பரிசீலனை செய்கையில் எதிர்மனுதாரர் பராமரிப்பு தொகையாக மாதம் ஒன்றுக்கு மனுதாரருக்கு ரூ.10,000/- யை செலுத்துவது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்த நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

8. இறுதியாக, மனுதாரருக்கு எதிர்மனுதாரர் மாதம் ஒன்றுக்கு ரூ.10,000/– பராமரிப்பு தொகையாக ஒவ்வொரு மாதமும் 5–ஆம் தேதிக்குள் செலுத்த வேண்டுமென்றும், அதனை இம்மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் முதல் செலுத்த வேண்டும் என்றும் இதன் மூலம் உத்தரவிட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் 2026 ஆண்டு ஜூன் மாதம் 10 ஆம் நாளாகிய இன்று, இத்திறந்த நீதிமன்றத்தில் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிப்பார்க்கப்பட்டு பின் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்/–கா.ஸ்ரீபதி)
நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.

**பிற்சேர்க்கை**

**மனுதாரர் தரப்பு சாட்சிகள்**

| | | |
|---|---|---|
| 1. | ம.சா.1 | திருமதி. ஜெயந்தி |

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| 1. | ம.சா.ஆ.1 | 21.08.2006ம் தேதியிட்ட திருமண அழைப்பிதழ். |
| 2 | ம.சா.ஆ.2 | 29.10.2021ம் தேதியிட்ட புகைப்படம். |
| 3 | ம.சா.ஆ.3 | 29.10.2021ம் தேதியிட்ட வாக்காளர் அடையாள அட்டை நகல். |
| 4 | ம.சா.ஆ.4 | 29.10.2021ம் தேதியிட்ட ஆதார் அட்டை நகல். |
| 5 | ம.சா.ஆ.5 | 13.01.2017ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு. |
| 6 | ம.சா.ஆ.6 | 16.02.2017ம் தேதியிட்ட திருப்பப்பட்ட அஞ்சல் உறை. |

| | | |
|---|---|---|
| 7 | ம.சா.ஆ.7 | 05.09.2015ம் தேதயிட்ட எதிர்மனுதாரர் காவல் துறையினருக்கு அனுப்பிய அறிவிப்பு. |

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்**

| | | |
|---|---|---|
| 1. | எ.ம.சா.1 | திரு. கணேஷ்பாபு |

**எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| 1 | எ.ம.சா.ஆ.1 | 18.10.2021ம் தேதியிட்ட எதிர்மனுதாரரின் தாயார் வீரம்மாள் படுத்தபடுக்கயையாக உள்ள மருத்துவ சான்று. |
| 2 | எ.ம.சா.ஆ.2 | 10.10.2025ம் தேதியிட்ட எதிர்மனுதாரர் வீட்டின் சமையலர் நாகவள்ளிக்கு எதிர்மனுதாரர் தான் சம்பளம் கொடுப்பதாக அவர் கூறிய வாக்குமூலத்தின் சான்று. |
| 3 | எ.ம.சா.ஆ.3 | 10.10.2025ம் தேதியிட்ட எதிர்மனுதாரர் வீட்டில் எதிர்மனுதாரரின் தாயாருக்கு உதவியாளராக உள்ள சித்ராவிற்கு எதிர்மனுதாரர் தான் சம்பளம் கொடுப்பதாக அவர் கூறிய வாக்குமூலத்தின் சான்று. |

(ஒம்/—கா.ஸ்ரீபதி)
நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.

//உண்மை நகல்//

SRIPATHI K

JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI
Digitally signed by SRIPATHI K
Location: TIRUPATHUR

நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.